காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கியிருப்பது மிகப் பெரிய அதிர்ச்சியை உண்டாக்கியிருக்கிறது. ஆகவே, தமிழர்களின் ஒட்டுமொத்த உணர்வாகப் பிரதிபலிக்கக்கூடிய வகையில், மாண்புமிகு முத்தமிழ் அறிஞர், தலைவர் கலைஞர் அவர்களின் நல்லாட்சி என்பதற்கு இலக்கணமாக, இது தமிழர்கள் ஆட்சி என்ற காரணத்தினாலேதான், அந்தப் பிஞ்சு உள்ளங்களுக்கு இரங்கல் தெரிவிக்கின்ற நிகழ்ச்சியாகவும், அதே வேளையில், சொல்ல முடியாத காட்டுமிராண்டித்தனமான, வெறித்தனமான காரியத்தில் ஈடுபடுகிற சிங்கள இராணுவத்திற்குக் கண்டனக் குரலை எழுப்புகிற வகையில், இந்த மாமன்றத்தில் தீர்மானமாக நிறைவேற்றிய நம்முடைய கலைஞர் அரசுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இது தமிழர்களுடைய அரசு என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு.

## 5. சுதந்திர தின விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் வெளியிட்ட மக்கள் நலம் பேணும் அறிவிப்புகளுக்குப் பாராட்டும், நன்றியும்

**திரு. ஜி.கே. மணி:** நேற்று முன்தினம் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், அரசு சார்பில் சுதந்திர தினக் கொடியேற்று விழா நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு ஒரு மிகப் பெரிய அறிவிப்பினை வெளியிட்டிருக்கிறார்கள். சுதந்திர தினச் செய்தியைச் சொல்லக்கூடிய அதே வேளையில், இந்த நாட்டிலே இருக்கிற ஏழையெளிய மக்களுக்கு இலவச எரிவாயு அடுப்பு வழங்கப்படும் என்ற நல்ல செய்தியை அறிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, ஒட்டுமொத்தத் தமிழ்நாட்டு மக்களின் சார்பிலே இதற்காகவும் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து, அமர்கிறேன்.

## 1. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (இ) விவசாயிகளின் பம்புசெட்களுக்கு இலவச மின்சாரம் வழங்கும் ஆணையை உரியவர்களுக்கு உடனே தெரிவித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள், சுய நிதி அடிப்படையில், ஏற்கெனவே விவசாயிகள் பெற்றிருக்கக்கூடிய விவசாய பம்புசெட் இணைப்புகளுக்கு, இனி free current தான் வழங்கப்படும்; அதற்கான கட்டணம் வசூலிக்கப்பட மாட்டாது என்று, ஏற்கெனவே அவர்களுடைய மானியக் கோரிக்கைக்கான பதிலுரையின்போது இந்த அவையில் அறிவித்தார்கள். இன்றுகூட ஓர் அறிக்கையை அறிவித்திருக்கிறார்கள். இனி அதற்குக் கட்டணம் வசூலிக்கக்கூடாது என்று அரசாணை வெளியிடப்பட்டதாகச் சொல்கிறார்கள். ஆனால் எங்கள் பகுதியில், நானேகூட, S.E. அவர்களை contact செய்து கேட்டபோது, 'இன்னும் எங்களுக்கு அரசாணை வரவில்லை. ஆகவே, அதுவரை நாங்கள் நிதி வசூலிப்போம்' என்று, நானேகூட அந்த நிதியைக் கட்டியிருக்கிறேன், கட்டணத்தைக் கட்டியிருக்கிறேன். ஆகவே, மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் உடனடியாக அந்த அரசாணையை, அந்தந்த S.E.-க்களுக்கு அனுப்பி, அவர்கள் இனி வசூலிக்கக்கூடாது என்று இந்த அவையின்மூலமாக ஓர் ஆணையைப் பிறப்பிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் தெரிவித்ததைப்போல, இது குறித்து ஆகஸ்ட் மாதம் 1 ஆம் தேதி இந்த அவையிலே நான் பதிலுரை அளிக்கும்போது, மிகத் தெளிவாக, 2 இலட்சத்து 10 ஆயிரம் இணைப்புகள், சுய நிதி மின் திட்டத்தின்கீழ் விவசாயிகள் யார், யார் பணம் செலுத்தி வருகிறார்களோ, அவர்கள் இனி செலுத்தத் தேவையில்லை என்று அறிவிப்புச் செய்தேன். அதற்குப் பிறகு, இந்த மாதம் 11 ஆம் தேதி அரசாணை பிறப்பிக்கப்பட்டு, வாரியத்திற்கும், அதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. ஒரு சில இடங்களிலே, அதிகாரிகளுக்கு அந்தத் தகவல் கிடைக்கவில்லை என்று, நேற்று உயர் கல்வித் துறை அமைச்சர் மாண்புமிகு பொன்முடி அவர்கள் விழுப்புரத்திலேயிருந்து எனக்குத் தெரிவித்தவுடன், உடனடியாக ஓர் அறிக்கையை விட்டு, உடனடியாக மின் வாரியத் தலைவர்மூலமாக, எல்லா அதிகாரிகளுக்கும் தெரிவிக்கச் சொல்லி, யாரும் வசூலிக்கக்கூடாது என்று அறிக்கை விட்டிருக்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் பணம் செலுத்தியிருப்பதாகச் சொன்னார்கள். அப்படிச் செலுத்தியிருந்தால், அது திருப்பி வழங்கப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*